## தி.மு.க. உறுதியான அடித்தளத்தில் இருப்பது மட்டுமல்ல -

# இந்திய அரசியலில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தீர்மானிக்கும் சக்தியாகத் திகழ்கிறார்!

## ‘இந்தியா டுடே’ இணையதள இதழில் சிறப்புக் கட்டுரை!

**சென்னை, மே 28 -**

**வரும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு. கழகம் உறுதியான அடித்தளத்தில் இருப்பது மட்டுமல்ல; இந்திய அரசியலை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தீர்மானிக்கும் சக்தியாகத் திகழ்கிறார்” என்று ‘இந்தியா டுடே’ இணையதள இதழில் பத்திரிகையாளர் கவிதா முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.**

**அந்தக் கட்டுரையில், பாரம்பர்யம் மற்றும் அதிகார வல்லமையைக் குறிக்கும் வகையில் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது முழுப் பெயரை கொண்டுள்ளார் என்றும்; நலத்திட்டங்களாலும், கூட்டாட்சி நிலையாலும் தி.மு.க. வலிமையாக உள்ளது என்றும்; குறிப்பிட்டுள்ளார்.**

‘தமிழகத்தின் போர்க்களம்: ஸ்டாலினின் தி.மு.க. ஏன் முன்னணியில் உள்ளது?’ என்ற தலைப்பில் இந்தியா - டுடே இணைய இதழில் கவிதா முரளிதரன் வெளியிட்டுள்ள கட்டுரை வருமாறு:-




மே 7, 2021 அன்று மு.க. ஸ்டாலின் தமிழ்நாடு முதல்வராக பதவியேற்ற போது, அவர் தனது நீண்ட பொது வாழ்வில் முதல் முறையாக “முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்” என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த பாரம்பரியத்திற்கான குறிப்பு வெறும் பகட்டான வார்த்தை அல்ல என்பது தெளிவாகிறது

அடுத்த சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் ஓர் ஆண்டு மட்டுமே உள்ள நிலையில், தி.மு.க. (திராவிட முன்னேற்றக் கழகம்) வலுவான நிலையில் இருப்பது மட்டுமல்லாமல், ஸ்டாலின் இந்திய அரசியலில் தனக்கென ஒரு பாதுகாப்பு வளையத்தை உருவாக்கியுள்ளார் என்றே கூறலாம்.

நலத்திட்டங்கள், குறியீடுகள் மற்றும் கூட்டாட்சி எதிர்ப்பு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு அவரது அடையாளத்தை உள்ளூர் நிர்வாகம் மற்றும் அரசியல் யதார்த்தத்தின் எல்லைகளுக்கு அப்பால் கொண்டு செல்கிறது. மு.க.ஸ்டாலின் அவர்களின் இந்த பெரிய அரசியல்சித்தாந்த ஒளிவட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் கட்டுக்கோப்பாகத் தெரிகிறது.

எதிர்க்கட்சிகளுக்கு, ஒரு சீரான வாதம் இல்லை. நிலையற்ற அ.தி.மு.க. (அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்)பா.ஜ.க. உறவு அதிக இழுபறி உடன் நீள்கிறது. 2024 இல் 41 சதவீத ஒருங்கிணைந்த வாக்கு விகிதம், சுமார் 13 மக்களவைத் தொகுதிகளில் தி.மு.க. கூட்டணியை விட அதிகமாக இருந்தாலும், 2023 விவா கரத்துக்குப் பிறகு அவர்களின் சமரசத்திற்கு வழிவகுத்தது.

ஆனால், தமிழக அரசியல் எளிய கணிதத்தில் இயங்காது. அ.தி.மு.க.வின் வாக்குகள் பா.ஜ.க.வுடன் பிரிந்ததால் அதற்கு உறுதியளிக்கப்பட்டதாகக் கூறலாம். 2026 தேர்தல் நெருங்கும் போது, தொகுதி மறுவரையறை அல்லது மொழி போன்ற கருப்பொருள்களில் தி.மு.க.வின் நிலைப்பாடுகளை எதிர்க்கும் அபாயகரமான முடிவை எடுக்க முடியாது. வடக்கின் திணிப்புகளுக்கு ஆழமாக ஒவ்வாமை கொண்ட ஒரு அரசியல் கலாச்சாரத்தில், இந்த விஷயங்களில் பாஜகவுடன் நீந்துவது பேரழிவை எதிர்கொள்வதற்கு சமம்.


‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்’ என்று உறுதிமொழியெடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.05.2021 அன்று பதவி ஏற்ற காட்சி!

நடிகர் விஜய், நிச்சயமாக, ஒரு எதிர்பாராத காரணி. அவரது அரசியல் தொடக்கமான தமிழக வெற்றி கழகம் (டிவிகே), ஆரம்ப ஆர்வலர்களை, குறிப்பாக இளைஞர்களிடையே ஈர்த்துள்ளது, ஆனால் தேர்தல் ரீதியாக சோதிக்கப்படவில்லை. மேலும் திமுக உதயநிதி ஸ்டாலின் என்ற தனது சொந்த சூரிய உதய சக்தியை கொண்டுள்ளது, இது ஓரளவு அதன் விளிம்பை ரத்து செய்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, மு.க.ஸ்டாலினின் தலைமைத்துவம் உள்ளது. “கூட்டாட்சிக்கு தமிழ்நாடு வழிகாட்டியது,” என்று எழுத்தாளரும், தி.மு.க. ஊடகப் பிரிவின் இணைச் செயலாளருமான சல்மா கூறுகிறார். “கூட்டாட்சி ஒற்றுமைக்கான வலுவான, தெளிவான குரல் இங்குதான் முதலில் எழுப்பப்பட்டது எங்கள் முதல்வர் அதற்கு தேசிய கவனத்தை ஈர்த்து, மற்ற மாநிலங்களில் விழிப்புணர்வையும் ஒருங்கிணைப்பையும் உருவாக்கினார்.”


கட்டுரையாளர் கவிதா முரளிதரன்

இது அதன் தனித்துவமான விற்பனை முன்மொழிதலுக்கு உணவளித்தது: நீட் (தேசிய மருத்துவ நுழைவுத் தேர்வு), இந்தி ‘திணிப்பு’, ஆளுநரின் தலையீடு போன்ற பிரச்சினைகளில் பாஜக தலைமையிலான மத்திய அரசுக்கு கூர்மையான எதிர்ப்பை வழங்கும் ஒரு கட்சியின் வீரதீரமான சுயவிவரம், திமுகவை இன்னும் இயக்கத்தில் இருக்கும் ஒரு இயக்கமாகவே நிலைநிறுத்துகிறது. அதற்கு எதிராகப் பார்க்கும் போது, டிவிகே போதுமான வாக்குகளைப் பிரித்து, அ.தி.மு.க. பா.ஜ.க. திமுகவை தாக்க அனுமதிக்கும் வாய்ப்புகள் என்ன? மு.க. ஸ்டாலின் அவர்களின் முழுப் பெயரை விட நீண்டது.

இவ்வாறு அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கடலூர் கிழக்கு மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் 102வது பிறந்தநாளை நலஉதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவோம்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

*கடலூர், மே 28-*

*கடலூர் கிழக்கு மாவட்ட செயற்குழுக்கூட்டம் வடலூரில் நடைபெற்றது.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை, மாதம் முழுவதும் வெகு சிறப்பாக கொண்டாட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம்,26.05.2025, திங்கள் கிழமை, காலை 11 மணி அளவில், வடலூர் மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள. புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.*

*கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், மேயர் சுந்தரி ராஜா, தொகுதி பொறுப்பாளர்கள் ஏ.அங்கையர்க்கண்ணி, விஜயராகவன், சுவை.சுரேஷ், எம்.கே.சிவா, அ.பாரிபாலன், முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள்- மருதூர் இராமலிங்கம், துரை.கி.சரவணன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மண்டல பொறுப்பாளருமான எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.*

*கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.*

*ஈடு இணையில்லா தமிழ் நாட்டின் சாதனை சரித்திர நாயகர், திராவிடத்தின் சமூக நீதி ஒலியானவர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முத்தாரம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்தநாள் ஜூன் திங்கள் 3-ம் நாள் மாவட்ட கழகத்தின் ஆணைப்படி அன்று முதல் ஒரு மாதம் வரை மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும்,*

*மக்கள் நலன் நிறைந்த விழாக்களை கழகக் கொடியேற்றி கொண்டாடுவது. மருத்துவ முகாம்கள், இரத்த தானம் செய்தல் எனவும் மாநகர, நகர ,ஒன்றிய, பேரூர் ,ஊராட்சிக் கழகங்கள், சார்பாக நடத்திடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.*

*இந்திய முதல்வர்களில் முதன்மையானவர், கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் திராவிட மாடல் அரசின் சரித்திர சாதனை திட்ட ங்களின் நல்வாழ்வு விளைவுகளை மக்களிடம் பிரச்சாரம் செய்வது,*

*இடைவிடாத தொடர்ந்து களப்பணியாற்றுவது, தலைமை கழகத்தின் தொகுதி பார்வையாளர்களுடன் இணைந்து ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் உள்ள வாக்காளர்களை, நியமிக்கப்பட்டுள்ள பிஎல்ஏ பிஎல்சி-யினருடன் தொடர்ந்து சந்தித்து சாதனை துண்டறிக்கைகளை கொடுத்து விளக்குவது.*

*2026 சட்டமன்ற தேர்தலில் கழகம் மாபெரும் வெற்றியினை பெற்றிட மாவட்ட கழகத்தின் ஆணைப்படி செயலாற்றுவது என முடிவு செய்யப்பட்டது.*

*கண்ணை இமைக்காப்பது போல கழகத்தை கட்டுப்பாட்டுடன் வளர்த்துக் காத்து வரும் கண்ணியமிக்க கடமை வீரர் மாவட்ட கழக செயலாளர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் செயல் திறனை பாராட்டி 8 மாவட்டங்களுக்கு மண்டல பொறுப்பாளராக பணியாற்ற வாய்ப்பு அளித்த கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கும், கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.*

*மாவட்ட கழகத்தின் அறிவுறுத்தலுடன் படி பவள விழா கண்டு இந்தியாவிலேயே நாளும் பொழுதும் பெருமைமிகு பாராட்டினை பெற்று வரும் கழகத்தின் ஆக்கப்பணிகளிலும், கழக வளர்ச்சி பணிகளிலும் அனைவரும் தீவிரமாக செயல்படுவது என்றும், குறிப்பாக திராவிட மாடல் அரசின் சாதனைகளை கூறி கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் செயலாற்றலை கூறி மகளிர், இளைஞர், மாணவ-மாணவிகள் மற்றும் நல்லோர் அனைவரையும் உறுப்பினராக சேர்க்கின்ற பணிகளில் ஈடுபடுவது என்றும், பணி விவரங்களை மாவட்ட கழகத்திடம் மாதம் ஒருமுறை அளிப்பது என்றும் தீர்மானிக்கப் பட்டது.*

*இக்கூட்டத்தில் மாவட்ட கழக துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து, ஆர். சக்திவேல், சுதாசம்பத்,*

*ஒன்றிய செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் மேற்கு அ.முத்துசாமி, குறிஞ்சிப்பாடி தெற்கு வி. சிவக்குமார், குறிஞ்சிப் பாடி வடக்கு ஆர்.நாராயணசாமி, பரங்கிப்பேட்டை வடக்கு முத்து. பெருமாள், ஆர்.ராஜேந்திரன், குமராட்சி கிழக்கு த.சங்கர், குமராட்சி தெற்கு ம. சோழன், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி, குமராட்சி மேற்கு கே.நடராஜன், பரங்கிப்பேட்டை தெற்கு ஆர்.கலையரசன்,*

*கம்மாபுரம் தெற்கு கே. ஆர்.ராயர், கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்கு பி.சுப்பிரமணியன், கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன், கடலூர் தெற்கு ஆர். விஜயசுந்தரம், புவனகிரி கிழக்கு எம்.மனோகரன், புவனகிரி மேற்கு ஏ.எஸ்.மதியழகன், கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி, திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், திருமுட்டம் மேற்கு கே. ஆர்.கோவிந்தராஜ், குமராட்சி மத்திய என்.கே.நடராஜன், கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மூ.இளையராஜா, வடலூர் நகர கழக செயலாளர் த. தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார்,*

*தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள்- வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், பொதுக் குழு உறுப்பினர்கள்: கே.பி. ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ். விஜயராக வன், ச.கல்யாண சுந்தரம், வி.பி.பாலு, மு. வெற்றிவேல், எஸ்.பி.கண்ணன், பா.கோதண்டபாணி,*

*பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி,*

*குறிஞ்சிப்பாடி கு.வே.ப. ஜெய்சங்கர், சேத்தியாதோப்பு ப. மனோகரன், திருமுட்டம் பூ.செல்வகுமார், புவனகிரி த.கந்தன், அண்ணாமலை நகர் க.பழனி, லால்பேட்டை எம்.அன்வர் சதாத், பரங்கிபேட்டை பேரூராட்சி மன்றத் தேன் மொழிசங்கர்,*

*மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: இளைஞரணி ஜி.கார்த்திகேயன், மாணவரணி அமைப்பாளர் அப்புசந்தியநாராயணன், மகளிர் தொண்டரணி எஸ்.மனோரஞ்சிதம், வழக்கறிஞரணி பி,அருள்ஜோதி, தொண்டர் அணி ஆராஅமுது, அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தாணூர் சிவக்கொழுந்து, ஓ.எல்.பி.பெரியசாமி, தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, பொறியாளர் அணி அப்பு.சந்திரசேகர்,*

*நெசவாளர் அணி ப.நல்லதம்பி, சிறுபான்மை யினர் நல உரிமைப்பிரிவு எம்.எஸ். முகமதுயூனூஸ், விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார், அயலக அணி வாசு(எ)விசுவராஜ், இலக்கிய அணி ஜி.கே. குமார்ராஜா, கலை இலக்கிய பிரிவு சின்னமணி,*

*ஒன்றிய துணை செயலாளர் கணேசன், பட்டுகுமார், காவாஸ்கர்,சிதம்பரம் நகர துணை செயலா ளர்கள் இளங்கோ, ஏ.ஆர்.சி.மணி, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் அ.ஜெயமணி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஏ.எம்.மதியழகன், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் உமாபதி, ஜெயச்சந்திரன், குப்புராஜ், கோபி, சரத் மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் மு.வெற்றிச்செல்வன், பி.கௌதமன், ப.பிரவின், ராகவன், உமாபாலன், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் மற்றும் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*



கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம், வடலூர் மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. கோ.ஐயப்பன், எம்.எல்.ஏ, மாவட்டக் கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், மேயர் சுந்தரி ராஜா, தொகுதி பொறுப்பாளர்கள் ஏ.அங்கையர்க்கண்ணி, விஜயராகவன்,சுவை.சுரேஷ், எம்.கே.சிவா, அ.பாரிபாலன், முன்னாள் எம்.எல்.ஏ.,க்கள் – மருதூர் ஏ.இராமலிங்கம், துரை. கி.சரவணன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் வேளாண்மை – அமைச்சரும், மாவட்ட கழக செயலாளரும், மண்டல பொறுப்பாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



நாகை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் நாகையில் தளபதிஅறிவாலயத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர், தாட்கோ தலைவர் என்.இளையராஜா பேசினார். உடன் நாகை மாவட்ட கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன், முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் மதுரைபாலா, சமூக வளைத்தல பயிற்சியாளர் விக்னேஷ்ஆனந்த், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என்.கார்த்தி மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.